## முதலாவது தேர்ச்சி : இறைத்திட்டத்தை விளங்கி அதற்கேற்ப தமது வாழ்வை அமைத்துக் கொள்வர்

4

### 1.4. எம்மில் மலரும் இறையாட்சி

ஒரு வயது முதிர்ந்த தந்தைக்கு மூன்று புதல்வர்கள் இருந்தார்கள். அவருக்கு பெரியதொரு வயல் சொந்தமாக இருந்தது. அவருடைய புதல்வர்கள் மூவரும் தொழில் எதுவும் செய்யாது மிகுந்த சோம்பேறிகளாக வாழ்ந்து வந்தார்கள். ஒருநாள் அவர்களது தந்தை அவர்களை அழைத்து தமது வயலில் புதையல் ஒன்று இருப்பதாக அவர்களிடம் கூறி இறந்து போனார். அதன்பின் அவர்கள் அந்தப் புதையலைத் தேடி எடுப்பதற்காக மிகுந்த ஆர்வத்தோடு வயலுக்கு ஓடிச்சென்று, அதைத் தினமும் கொத்திக் கொத்தித் தேடினார்கள். ஆனால் புதையல் கிடைக்கவில்லை. இறுதியில் நிலம் முழுவதும் நன்கு கொத்தப்பட்டு பண்படுத்தப்பட்டு விட்டது. பின்னர் அந்நிலத்தில் விதைத்து பயிர் செய்தார்கள். பயிர் நன்கு செழித்து வளர்ந்தது. அதிகளவு பயனைக் கொடுத்தது. இதுவே அவர்களுக்குக் கிடைத்த புதையல்.

**பதிலளியுங்கள்**

- மூன்று புதல்வர்களினதும் சோம்பேறித்தனத்தை நீக்க வயது முதிர்ந்த தந்தை என்ன வழியைக் கையாண்டார்?
- புதையலைப் பெற புதல்வர்கள் என்ன செய்தார்கள்?
- இறுதியாக அவர்களுக்குக் கிடைத்த புதையல் எது?
- இக்கதையிலிருந்து நீர் பெற்றுக்கொள்ளும் செய்தி என்ன?

இக் கதையில் வரும் புதல்வர்கள் முதலில் சோம்பேறிகளாக இருந்து புதையலை அடையவேண்டும் என்ற ஆவலினால் முயற்சியுடையவர்களாக

மாறுகிறார்கள்.

இறையாட்சியின் வருகையை அறிவித்து இயேசு தம் பணியை ஆரம்பித்தார்.

## இறையாட்சி பற்றிய உவமைகள்




ஒருவர் நிலத்தில் மறைந்திருந்த புதையல் ஒன்றைக் கண்டு பிடிக்கிறார். அவர் அதை மூடி மறைத்துவிட்டு மகிழ்ச்சியுடன் போய்த் தமக்குள்ள யாவற்றையும் விற்று அந்த நிலத்தை வாங்கிக்கொள்கிறார். விண்ணரசு இப்புதையலுக்கு ஒப்பாகும்.

வணிகர் ஒருவர் நல் முத்துகளைத் தேடிச் செல்கிறார். விலை உயர்ந்த ஒரு முத்தை கண்டவுடன் அவர் போய் தமக்குள்ள யாவற்றையும் விற்று அதை வாங்கிக் கொள்கிறார். விண்ணரசு அந்நிகழ்ச்சிக்கு ஒப்பாகும்.

விண்ணரசு கடலில் வீசப்பட்டு எல்லா வகையான மீன்களையும் வாரிக்கொண்டுவரும் வலைக்கு ஒப்பாகும். வலை நிறைந்ததும் அதை இழுத்துக் கொண்டு போய்க் கரையில் உட்கார்ந்து நல்லவற்றைக் கூடைகளில் சேர்த்து வைப்பர். கெட்டவற்றை வெளியே எறிவர். இவ்வாறே உலக முடிவிலும் நிகழும். வானதூதர் சென்று நேர்மையாளரிடை-யேயிருந்து தீயோரைப் பிரிப்பர். பின் அவர்களைத் தீச்சூளையில் தள்ளுவர். அங்கே அழுகையும் அங்கலாய்ப்பும் இருக்கும்.

மத். 13:44-50

இறையாட்சி பெறுமதியுள்ளது. உலக செல்வங்கள் எவையும் அதற்கு ஈடாகாது. இறையாட்சியை சுவீகரித்துக்கொள்ள உலக செல்வங்களைக் கருவிகளாக்கிக் கொள்ள வேண்டும். அதே வேளையில் அதை முனைந்து தேடிப்பெற்றுக்கொள்ள வேண்டும்.

இறையாட்சி அழைப்பு அனைவருக்கும் விடுக்கப்படுகின்றது. இறையாட்சி விழுமியங்களை வாழ்வதன் மூலமே இறையாட்சிக்கு உரித்துடையவர்களாவோம்.

## இறையாட்சியின் வளர்ச்சி

இயேசு அவர்களுக்கு எடுத்துரைத்த வேறு ஓர் உவமை "ஒருவர் கடுகு விதையை எடுத்துத் தம் வயலில் விதைத்தார். அவ்விதை எல்லா விதைகளையும் விடச் சிறியது. ஆனாலும் அது வளரும் போது மற்றெல்லாச் செடிகளையும் விடப் பெரியதாகும். வானத்துப் பறவைகள் அதன் கிளைகளில் வந்து தங்கும் அளவுக்குப் பெரிய மரமாகும். விண்ணரசு இக் கடுகு விதைக்கு ஒப்பாகும்".

அவர் அவர்களுக்குக் கூறிய வேறு ஓர் உவமை; "பெண் ஒருவர் புளிப்பு மாவை எடுத்து மூன்று மரக்கால்மாவில் பிசைந்து வைத்தார். மாவு முழுவதும் புளிப்பேறியது. விண்ணரசு இப்புளிப்பு மாவுக்கு ஒப்பாகும்"

மத். 13:31-33

மேற் குறிப்பிட்ட உவமைகளின் மூலம் நமக்குக் கிடைக்கும் செய்திகள்:

- இறையரசு ஆற்றல் மிக்கது.
- இறையரசு எளிமையான முறையில் செயலாற்றுகிறது.
- இறையரசு மிகவும் சிறியதாக ஆரம்பித்து வளர்ந்து பரந்து செல்கிறது.
- இறையரசு நமக்கு நன்மை செய்கிறது.

### செயற்பாடு :-

மேற்குறிப்பிட்ட திருவிவிலியப் பகுதியிலிருந்து உமது வாழ்க்கைக்கு எடுக்கக்கூடிய விழுமியங்களைக் குறிப்பிடுங்கள்.

1. 
2. 
3. 
4. 

# இறையாட்சியின் ஆசீர்கள்

துயருறுவோர்
பேறுபெற்றோர்;
ஏனெனில் அவர்கள்
ஆறுதல் பெறுவர்.

ஏழையரின்
உள்ளத்தோர்
பேறுபெற்றோர்;
ஏனெனில் விண்ணரசு
அவர்களுக்குரியது.

நீதி நிலை
நாட்டும் வேட்கை
கொண்டோர்
பேறுபெற்றோர்;
ஏனெனில் அவர்கள்
நிறைவு பெறுவர்.

தூய்மையான
உள்ளத்தோர்
பேறுபெற்றோர்;
ஏனெனில் அவர்கள்
கடவுளைக் காண்பர்.



கனிவுடையோர்
பேறுபெற்றோர்;
ஏனெனில் அவர்கள்
நாட்டை உரிமைச்
சொத்தாக்கிக்
கொள்வர்.

அமைதி
ஏற்படுத்துவோர்
பேறுபெற்றோர்;
ஏனெனில் அவர்கள்
கடவுளின் மக்கள் என
அழைக்கப்படுவர்.

இரக்கமுடையோர்
பேறுபெற்றோர்;
ஏனெனில் அவர்கள்
இரக்கம் பெறுவர்.

நீதியின் பொருட்டு
துன்புறுத்தப்படுவோர்
பேறுபெற்றோர்;
ஏனெனில்
விண்ணரசு
அவர்களுக்குரியது.

மத் 5:3-10 பகுதியை வாசித்து மேலே குறிப்பிடப்பட்டுள்ள பேறுகளை வரிசைப்படுத்துக.

**இறையாட்சிக்காக**
**இவற்றை வாழ்வாக்கும் போது**
**இறையாட்சி**
**எம்மிடையே உதயமாகிறது**

## செயற்பாடு :

1. நீர் அறிந்து கொண்ட எட்டுப் பேறுகளையும் உமது வாழ்க்கையில் செயற்படுத்தக்கூடிய வழிமுறைகளை எழுதிக் காட்டுக.
2. இறையாட்சியின் வளர்ச்சி பற்றிய உவமைகள் இரண்டு எழுதுக.
3. இறையாட்சியின் முக்கியத்துவம் பற்றிய உவமைகள் இரண்டு எழுதுக.
4. புதையல் உவமையிலிருந்து உமது வாழ்க்கைக்குப் பெற்றுக்கொள்ளக்கூடிய வழிகாட்டல்கள் இரண்டு எழுதுக.

**வாழ்க்கைக்கு**
அன்று இயேசு கூறிய எட்டுப்பேறுகளையும்
இன்றைய சமுதாயத்தில் செயற்படுத்த
இறை பிள்ளைகளாகிய
நாம் உறுதியான தீர்மானம் செய்வோம்.